அகதா கிறிஸ்டி

COMICS PDF TIMES

# மர்ம மாளிகை

தமிழில்
K.V. கணேஷ்

# COMICS PDF TIMES

வெளியிடு எண் : 53

தமிழாக்கம் : திரு K.V.கணேஷ்
வடிவமைப்பு : திரு பிரசன்னா ஸ்ரீதர்
பிழை திருத்தம் : திரு வீரபாண்டியன்
ஆலோசனை : திரு கணேஷ் பாலா
திரு இளங்கோ
திரு ஜானி
திரு பூபதி
ஒருங்கிணைப்பு : சுரேஷ் சந்த்

## COMICS PDF TIMES

**வழக்கமான ஆரவாரமில்லாமல் சீராக செல்லும் அகதா கிறிஸ்டி கதைகளில் இருந்து மாறுபட்ட பிரமாண்டமான கதைக்களம் . தங்கம் தேடும் மும்முரத்தில் தனக்கிடப்படும் பணியை நண்பணிடத்தில் ஒப்படைக்கும் ஒருவன் . அவனுக்காக ஒரு நாட்டின் அடுத்த மன்னர் யார் என்பதையே தீர்மானிக்கும் ரகசியங்கள் அடங்கிய முன்னாள் மன்னனின் டைரியை பத்திரிக்கையாளரிடம் ஒப்படைக்க வெளிநாடு செல்லும் கதாநாயகன் . அங்கோ அவனிடமிருந்து அந்த டைரியை அபகரிக்க முயற்சி செய்யும் இளவரசனின் தேச பக்தி படை மற்றும் மக்களாட்சி ஆதரவாளர்களின் கும்பல் . பெட்ரோல் சுரங்க மாஃபியாக்களும் அரசாங்க உயரதிகாரிகளும் ரகசியமாக சந்திக்கும் ஒரு மர்ம மாளிகையில் நடக்கும் சம்பத்தப்பட்ட இளவரசனின் கொலை . பத்திரிக்கையாளர் என வந்து தன்னிடமிருந்து டைரியை வாங்கி சென்றதே இளவரசன்தான் என கதாநாயகனுக்கு காத்திருக்கும் அதிர்ச்சி. இவைகளுக்கு இடையே மர்மமாக உலவும் பார்வையாலேயே பல சாம்ராஜ்யங்களை சாய்த்த ஒரு இளம்பெண்ணும் அவளுக்கு எழுதப்பட்ட காதல் கடிதங்களும் ... என பரபரப்பாக விறுவிறுப்பாக நகரும் கதை .. ஓவியங்களும் மற்ற அகதா கிறிஸ்டி படக்கதைகளை விட மிக சிறப்பு .. எழுத்தாளர் சுஜாதாவின் சில கதைகளில் வரும் கடைசி வரி ட்விஸ்ட் போல இதிலும் ஒரு கடைசி பட பஞ்ச் ..**

**அனைவரும் படிக்க வேண்டிய கதை**

**விமர்சனம்**

**நன்றி திரு அலெக்ஸாண்டர் வாஸ்**


1925, சவுத் ஹாம்டன் துறைமுகம்....
ஹலோ என் அருமை இங்கிலாந்தே!! உன்னை மீண்டும் பார்ப்பதில் மகிழ்ச்சி!!
சார் பேப்பர் வேணுமா?
வேண்டாம் பெரியவரே நன்றி 7 வருடம் கழித்து இப்போதுதான் திரும்புகிறேன்....
COMICS PDF TIMES
நன்றாக முடிவு செய்து கொள் லோமாக்ஸ். ஸ்லோவாக்கியாவில் இருந்து வரும் கணவானிடம் நடத்தும் பேரம் எனக்கு சரியாக புரிபடவில்லை. அவர் பெயர் என்னவென்று சொன்னாய்.?
உயர்திரு ஸ்டைல்பிட்ச். இது மிகவும் சுலபம் பிரபு கேட்டர்மேன் அவர்களே தெற்கு ஆப்பிரிக்காவில் இருந்து வரும் மனிதனின் பெயர் மெக்கார்த் அவர் கொண்டு வரும் கடிதங்கள் மிகவும் அபாயமானவை என்று நாம் சொல்லலாம்
ஸ்டைல்பிட்ச் இரண்டு மாதங்களுக்கு முன் இறந்து விட்டார் ஸ்லோவாகியா நாட்டில் செல்வாக்கு படைத்தவர் ஆனால் மகா வில்லன் சிறந்த ராஜதந்திரி மெக்கார்த் வசம் ஒப்படைக்கப்பட்ட அவரது கடிதங்கள் மற்றும் டைரி வெளியானால் சர்வதேச அளவில் பிரச்சினைகள் எழக்கூடும்.
என்ன? அந்த நாட்டின் அரச வாரிசு இளவரசர் மைக்கேல் அடுத்த வாரம் இந்த சிம்னி மாளிகைக்கு அரசு முறை விருந்தினராக வர இருக்கிறார் தெரியுமா?



இந்த சூழ்நிலையை சமாளிக்க ஒரே வழிதான் இருக்கிறது நீங்கள் அந்த மெக்கார்த்தையும் விருந்துக்கு அழைக்க வேண்டும்.
ஏன் எப்போதும் இந்த அரசியல் மற்றும் பொருளாதாரக் கூட்டங்களை என் சிம்னி மாளிகையி--லேயே நடத்துகிறாய்? சரி அப்படியே ஆகட்டும்!!
மெக்கார்த் அந்தக் கடிதங்களை பத்திரிக்கைகளில் வெளியிடுவதை நாம் தாமதப்படுத்த வேண்டும். குறைந்தபட்சம் இளவரசர் மைக்கேல் முடிசூட்டி அரசராகும் வரையாவது.
சொல்ல வேறு எதுவும் இருக்கிறதா?
என் உறவுப் பெண் விர்ஜீனியாவையும் அழைத்தால் மிகச் சிறப்பாக இருக்கும்.
அட்டா நான் கிளப்புக்கு போகும் நேரமிது, லோமாக்ஸ் எல்லாவற்றை--யும் சிறப்பாகக் கவனித்துவிடு, சரியா?
இவனைப் பார்த்தாலே வெறுப்பாக இருக்கிறது ஆனால் அழகி விர்ஜீனியா-வுக்காக பொறுத்துக் கொள்ளலாம்.
கேட்டர்ஹாம் பிரபு கிளம்பினார்.
அடுத்த வாரம் மிகவும் போர் அடிக்க போகிறது எனக்கு நல்ல ஓய்வு தேவை நல்ல வேளை என் மகள் பாண்டல் எனக்கு அங்கே வந்து உதவி செய்வாள்.
பிளிட்ஸ் ஹோட்டல் பணம் அதிகமாக இருந்தாலே உள்ளே போக முடியும் போல
உங்களுக்காக பூங்காவை பார்த்தபடி ஒரு ஆடம்பர அறையை ஏற்பாடு
ரொம்ப நன்றி பெரியவரே....
நான் எதிர்பார்த்த மனிதன் இவன் தான் போலும்...


அற்புதம் .. சுகமான ஒரு குளியல் என் நினைவுகளை இதமாக்கும்.
நிச்சயமாக சார்!
முதலில் கொஞ்சம் உற்சாக பானம் புகழ்பெற்ற ஜிம்மி மெக்கார்த் லண்டன் வந்ததற்காக.
ஏழு வருடத்திற்கு பின் என்னை யாரும் அடையாளம் கண்டு பிடிப்பார்களா? அதிசயம் தான். நான் ஆண்டனி கேட் தென்னாப்பிரிக்க வெப்பத்தில் பலவருடம் கழித்து உள்ளேன்.
என் பழைய நண்பன் ஜிம்மி மெக்கார்த்தா இங்கே இருப்பது?
ஆண்டனி இங்கே என்ன செய்கிறாய்?
சுற்றுலா பயணிகளுக்கு நான் பயண ஏற்பாடுகள் செய்கிறேன் நீ இன்னம் மண்ணுக்குள் தங்கத்தை தேடி தோண்டிக் கொண்டு இருக்கிறாயா?
அதெல்லாம் அப்போது.! எனக்கு கிடைத்ததை பற்றி உன்னிடம் சொல்ல வேண்டும்..
ஸ்லோவாக்கியா நாட்டைப் பற்றி கேள்விப்பட்டு இருக்கிறாயா நாடுகடத்தப்பட்ட பிரதமர் பிரபு ஸ்டைல்பிட்ச் நான்கு வருடங்களுக்கு முன் பாரிசில் சந்தித்து பழகினேன். இப்போது தொடர்பு இல்லை. இரண்டு வாரம் முன் அவரிடம் இருந்து ஒரு கையெழுத்துப் பிரதி வந்து சேர்ந்தது.
அவரது நினைவு குறிப்புகளா.? அதை ஏன் உன்னிடம் அனுப்ப வேண்டும்?
ஒருமுறை திருடர்களிடமிருந்து அவரது உயிரைக் காப்பாற்றினேன் அதன்பிறகு அவர் வேறு யாரையும் நம்ப வில்லை அவரது கடிதங்களை லண்டனில் உள்ள பத்திரிகையாளரிடம் பத்திரமாக சேர்ப்பித்தால் எனக்கு ஆயிரம் பவுண்ட் கிடைக்கும் என்ற குறிப்பும் இருந்தது.



எனக்கு இங்கே முக்கியமான வேலை இருக்கிறது என்னால் போக முடியாத நிலை....
ஆனால் இல்லாத தங்கத்தை தேடுவதைக் காட்டிலும் ஆயிரம் பவுண்ட் மிகவும் மதிப்பு உள்ளது.
இல்லை தங்கம் நிச்சயம் இங்கே இருக்கிறது, எனக்கு பதிலாக நீ போக முடியுமா? ஜிம்மிமெக்கார்த் என்ற என் பெயரில் நீ இங்கிலாந்து செல்வதாக இருந்தால் நான் உனக்கு 250 பவுண்டு தருகிறேன்!
ஏன் முடியாது? நிச்சயமாக?
சுலபமான வேலை கையெழுத்துப் பிரதிகளை அந்த பத்திரிக்கையாளரிடம் கொடுத்தால் 250 பவுண்டு கிடைக்கும் இடையே ஜிம்மியின் தூதுவனாக ஒரு பிரபல பெண்மணியை பார்த்து சில அந்தரங்க கடிதங்களை கொடுக்க வேண்டும்...
விர்ஜினியா ரேவல் பிரபல நடிகை அவரது புகழுக்கு களங்கம் வராமல் இருக்க அந்த கடிதங்களை அவரிடம் நேரில் ஒப்படைக்க வேண்டும்.
வெர்ஜீனியா ரேவலை சந்திக்கப் போகிறான்...
இதற்கிடையே...
பில் இப்போது நீ செய்ய வேண்டியது இதுதான் உடனே விர்ஜீனியா ரேவல் வீட்டிற்கு போ இன்று மாலை 4 மணிக்கு அவளை நேரில் சந்தித்து மிகவும் முக்கியமான விஷயத்தை பேசவேண்டும் என்று சொல் இது மிகவும் அவசரமானது.
சரி MR. லோமாக்ஸ். இதோ உடனே கிளம்பி போகிறேன்.
பில் இப்போது ஒரு முக்கியமான ரகசிய வேலைக்- -காக வெளியே போக போகிறான்!!


ஹலோ பில் நீ வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கு போகவில்லையா?
MR.லோமாக்சிடம் இருந்து ஒரு முக்கிய செய்தி கொண்டு வந்திருக்கிறேன் மேடம்.
என்னைப் பார்க்க ஒரு அயல்நாட்டு மனிதர் வந்திருக்கிறாரா? பெயர் என்ன சொன்னாய்? பெரோன் . சரி சரி மேலே அனுப்பு பார்க்கிறேன்.
ஏன் அதை போன் செய்து சொல்லி இருக்க-லாமே?
அதைத்தான் லோமாக்ஸ் இடம் சொன்னேன் போன் வேலை செய்யவில்லையாம் அதனால் நேரில் அனுப்பினார் மேலும் எனக்கு உங்களை மிகவும் பிடிக்கும்.
தெரியும் பில் எனக்குத் தெரியும் இந்த உலகில் உள்ள கவர்ச்சியான ஆண்கள் எல்லோரையும் எனக்கு பிடிக்கும் என்னை மதிய உணவுக்கு வெளியே கூட்டிப் போவாயா? சரி அந்த கெழட்டு கோமாளிக்கு என்னிடம் என்ன சொல்ல வேண்டுமாம்?
MR.மெக்கார்த் உங்களை சந்தித்ததில் பெருமை அடைகிறேன் என் பெயர் பேரோன் லோலோ பிரிட்சி.
எனக்கு உங்களைத் தெரியுமா பேரோன்.?
ஸ்லோவேகியா நாட்டின் தேச பக்தி கட்சியின் லண்டன் பிரதிநிதி நான். இளவரசர் மைக்கேலுக்கு முடிசூட்டி மன்னராட்சியை மலரச் செய்யும் நேரம் வந்துவிட்டது.
அப்படியா?
எல்லாம் ஏற்பாடாகிவிட்டது .அதற்குள் ஏதும் அவதூறு வந்து விடக் கூடாது என்று நான் வந்திருக்கிறேன் நேரிடையாக கேட்கிறேன் மிஸ்டர் மெக்கார்த் உங்கள் வசம் உள்ள ஸ்டைல்பிட்ச் பிரபுவின் கடிதங்களை எங்கள் வசம் ஒப்படைக்க ஆயிரத்து ஐநூறு பவுண்டு தர தேசபக்தி கட்சி தயாராக உள்ளது.



COMICS PDF TIMES


பிறகு...
இனிய மாலை வணக்கம் சார்!
நன்றி நண்பரே...
?!
யாரடா நீ ?? என் அறைக்குள் வர என்ன துணிச்சல்?
என்னை யாராலும் தடுக்க முடியாது...
போ வெளியே!! சொன்னது கேட்கவில்லையா?
ஸ்டைல்பிட்ச் பிரபுவின் கடிதங்களைக் கொடுத்து விட்டால் நான் போய்விடுவேன்!!
உன்னை அனுப்பியது யார்? பிரபு லாலிபாப்பா?
பிரபுவா? சமத்துவக் கட்சியில் நான் ஒரு உறுப்பினர் முடியாட்சிக்கு எதிரானவன்.
உன்னை அடிக்கும் முன் ஓடிவிடு!!...
?!
இந்த உதை உன் சமத்துவ கட்சிக்கு!!
வெடிகுண்டுக்கு சமமான இந்த கடிதங்களை படிக்க இதுவே சரியான நேரம்.


மறுநாள் காலை...
கடவுளே என்ன நடக்குது இங்கே??!
?!
அந்த வேலை இங்கே நடக்காது!!
அஹ்!!
ம்ம்க்க்
கும்
என் கையில் மட்டும் கிடைத்தாய் என்றால்...
அதிர்ஷ்டவசமாக டைரி என் தலையணை அடியில் இருந்ததால் தப்பித்தது ஆனால் ரேவல்லின் கடிதங்கள்??? அதை மட்டும் காணோம்..??
நடந்த சம்பவத்திற்கு மிகவும் வருந்துகிறேன் மிஸ்டர் மெக்கார்த் அவன் இங்குள்ள பணியாளன் பெயர் குசெப்பி.அவனை பிடிக்க ஏற்பாடு செய்கிறேன்.
அது மிகவும் முக்கியமானது அதற்கு முன்னால் மிஸஸ் வெர்ஜீனியா ரேவல்லின் விலாசம் கிடைக்குமா??


மன்னிக்கவும் மேடம் உங்களை பார்க்க ஒருவர் வந்திருக்கிறார்.
லோமேக்ஸ் தான் வந்திருப்பார்
இல்லை மேடம் இவர் அயல்நாட்டவர் பெயரை சொல்லவில்லை
என்னை சந்திக்க விரும்பினீர்களா?
நீங்கள் தான் மிஸஸ் ரேவலா? திமோத்தி ரேவல்லின் மனைவி தானே? உங்கள் கணவருடன் பேசுவதை விட உங்களிடம் பேசுவதே நல்லது.
அது மிகவும் கஷ்டம்...
என்ன இது? கடிதமா?
நீங்களே பாருங்கள்...
பாரிசில் இருக்கும் கேப்டன் ஓ நீல் என்பவருக்கு எழுதப்பட்டது.
அந்தக் கையொப்பம் உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா?
என்ன?? இது என்னுடையது.
...ஆனால் இந்த கையெழுத்தை நான் போடவில்லை
ஏராளமான கடிதங்கள் என் வசம் உள்ளது தவறான கைகளில் கிடைத்தால் விளைவுகள் விபரீதமாகும் அவற்றைத் திரும்பப் பெற விலை கொடுத்து வாங்க விரும்புகிறீர்களா?
என்னை பிளாக் மெயில் செய்கிறாய்? சரி உன் விலையை சொல்?
ஆயிரம் பவுண்டுகள்!!
என்னிடம் இப்போது இருப்பது 40 பவுண்டுகளே. வாங்கிக்கொண்டு இங்கிருந்து கிளம்பு.
?!
என்ன நடக்கிறது டியர்? இங்கே வந்து போகும் அந்த அந்நியன் யார்?
அவன் ஒரு பிளாக் மெயிலர். என்னை தவறாக எடை போட்டு விட்டான்.


உன்னிடம் ஒரு உதவி கேட்க வேண்டும் மை டியர் விர்ஜீனியா. ஒரு நபரை நீ சந்திக்க வேண்டும்.
இன்னொரு பிளாக்மெயில்காரனா? இன்று காலை வந்தவன் அவ்வளவு புத்திசாலி இல்லை அவன் என்னை குறைத்து மதிப்பிட்டுவிட்டான்.
இல்லை! ஒரு அழகான இளைஞன் நாளை லண்டன் வருகிறான் உன் கவர்ச்சியால் அவனை கட்டிப் போட வேண்டும்.
ஜார்ஜ் கவர்ச்சி வலை வீசுவது என் தொழில் அல்ல, உனக்கே தெரியும்.
நீ நினைப்பது போல் இல்லை. ஜிம்மி மெக்கார்த் ஒரு கனடா நாட்டவன். ஸ்லோவாக்கியா நாட்டுக்கும் நம் நாட்டுக்கும் இடையே ஒரு ஒப்பந்தத்தில் முக்கியப் பங்கு வகிக்க போகிறான். அவனது உதவியுடன்தான் இளவரசர் மைக்கேல் அரசராக முடி சூட முடியும். ஆனால் இது ராஜ ரகசியம்.
நீங்கள் சொல்வதைக் கேட்டால் சிரிப்புதான் வருகிறது மன்னர் நாலாம் நிக்கோலசின் படுகொலை செய்தி தினசரிகளில் பரபரப்பாக இருக்கிறது. இந்த வார இறுதியில் சிம்னி மாளிகைக்கு வருகை தரும் இளவரசர் மைக்கேல் பற்றி விபரங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்?
என்ன?!
இன்று காலை பாண்டல் போன் செய்து என்னை அழைத்தாள். மெக்கார்த்தும் சிம்னி மாளிகைக்கு வரப்போவதாக சொல்லிவிடாதீர்கள், கேட்டால் வேடிக்கையாக இருக்கும்.
பாண்டல் போன் செய்தாளா... சரி நான் சில ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.
உற்சாகமாக இருங்கள் ஜார்ஜ், உங்கள் விருந்தினரை மயக்க என்னால் ஆன முயற்சியை செய்கிறேன்.



ட்ர்ர்ரிங்
ட்ர்ர்ர்ங்
ஹலோ!! பால்டர்சன்? பத்திரிக்கை ஆஃபீசா?.... ஆமாம் நான் நேற்று வந்தேன்..... ஆமாம்.... அந்த டைரி என்னிடம் தான் இருக்கிறது...
என்ன? எனக்கு ஆபத்தா? அதை நானே நேரில் கொண்டு வர வேண்டுமா...?? நல்லது உங்கள் ஆள் நேரில் வந்து அதைப் பெற்றுக் கொள்ளும் வரை நான் காத்திருக்கிறேன்...
நல்லவேளை.! பத்திரிக்கை ஆபீஸில் இருந்து ஒருவர் இன்று இரவு இங்கே வருகிறார் ஆயிரம் பவுண்ட் பணத்தை கொடுத்துவிட்டு அந்த டைரியை வாங்கி கொள்ள போகிறார்.
சிறிது நேரத்தில்...
என் பெயர் ஜிம்மி மெக்கார்த். இதோ அந்த டைரி, ஆனால் மிகவும் கவனம் தேவை, ஹோட்டலை விட்டு வெளியே செல்லும்போது நீங்கள் கொல்லப்படும் அபாயம் இருக்கிறது.!!
என் பெயர் ஹோம்ஸ்!!
COMICS PDF TIMES
டொக் டொக் டொக்
நான் கேட்ட ஆயிரம் பவுண்ட் இப்போது என் கையில்!! இப்போது யார்? ஹோம்ஸ் எதையாவது மறந்து விட்டாரா?
மிஸ்டர் மெக்கார்த்! இதோ நீங்கள் கேட்ட மிஸஸ் ரேவல்லின் விலாசம்.
?!

மறுநாள் காலை...


திருட்டு சம்பவத்திற்காக மிகவும் வருந்துகிறோம் நீங்கள் கிளம்பிச் செல்ல அது காரணமில்லை என்று நினைக்கிறேன்...
இல்லை மிஸ்டர் மெக்கார்த் கிளம்பும் நேரம்.
வாடகை குறைவான ஹோட்டலுக்கு என்னை அழைத்துச் செல்!!
உங்கள் விருப்பம் போல் சார்!!
பிளிட்ஸ் உடன் ஒப்பிடும் போது மிகவும் சாதாரண ஹோட்டல்தான். டைரியை ஒப்படைத்து ஆகிவிட்டது. நான் மீண்டும் நானாகிவிட்டேன். குட்பை ஜிம்மி மெக்கார்த்... ஹலோ ஆண்டனி .
அதன் பிறகு...
காரை ஓரமாக நிறுத்திவிடு வால்டன். நான் ஸ்டேஷனுக்கு டாக்ஸி பிடித்து செல்கிறேன்.
கவிதைத்தொகுப்பு விற்பவனா? இன்று காலை தான்அப்படி ஒரு கவிதையை விலைக்கு வாங்கினேன் நண்பரே.
ஹாஹாஹா
மேடம்!! மேடம்!!... வரவேற்பு அறையில்? ஒரு ... ஒரு... பிணம் கிடக்கிறது!!!



COMICS PDF TIMES


இப்போது நம் புலன் விசாரணையை துவக்கலாம்... மிஸஸ். ரேவல் இதற்கு முன் இந்த துப்பாக்கியை பார்த்ததுண்டா?
நிச்சயமாக இல்லை!!
விசித்திரம்! அப்படியானால் இது என்ன?
Virginia
ஓவ்... சாத்தியமே இல்லை என்னிடம் துப்பாக்கி கிடையாது!
குசெப்பியை கொன்றவன் கொலைப்பழி உங்கள் மீது விழ வேண்டும் என்று திட்டமிட்டு செய்துள்ளான் இன்று மதியம் நீங்கள் வீட்டில் இருக்க மாட்டீர்கள் என்றும் வீடு திரும்பும்போது உடல் காணப்பட வேண்டும் என்றும் எண்ணியுள்ளான் குசெப்பி இங்கே வருவதையும் தெரிந்து வைத்துள்ளான். இன்னொரு கேள்வி ?? உங்களுக்கு எதிரிகள் உண்டா?
இருக்கலாம்! ஆனால் இவ்வளவு மோசமாக இருக்காது.
நாம் போலீசை கூப்பிட மாட்டோம் என்று நினைக்கிறேன் மிஸஸ் ரேவல் அதற்கு பதிலாக உடலை அப்புறப் படுத்தி விடலாம் உங்கள் பணிப்பெண்ணை வெளியே அனுப்புங்கள் நான் வேலையை தொடங்குகிறேன்.
குசெப்பியின் உடலை ஒரு பெட்டியில் போட்டு ரயில் நிலையத்தில் சரக்குகளுக்கு இடையே வைத்து விட வேண்டும்.
பிறகு லண்டனை விட்டு கிளம்பினால் வேலை முடிந்தது.
கொஞ்சம் பொறு? என்ன இது??
சிம்னி மாளிகை வியாழன் 23-45.
ஆனால் இன்றைய தேதி உள்ளது

அன்று இரவு....



வந்தா- -யிற்று!!
சுவர் ஏறி குதிக்க வேண்டியது தான்...!
அதோ சிம்னி மாளிகை!!
டாங் டாங் டாங்
மூன்று மணியோசை, நேரம் இரவு 11-45
டுப்
என்ன அது? துப்பாக்கி குண்டு சத்தம்?



COMICS PDF TIMES



இதுவரை என்ன நடந்தது என்று பார்க்கலாம். நேற்று வந்தவர்கள் இளவரசர் மைக்கேல் அவரது உதவியாளன் போரிஸ் மற்றும் தொழிலதிபர் ஐசக்டீன் அமெரிக்கர் ஹிராம் பிஷ்ஷும் அவரை சந்திக்க வந்தவர்கள்.
...மேலும் லோமாக்சின் அலுவலகத்தில் இருந்து பில்லும் இரண்டு பெண்களும். ஒருத்தி மிஸஸ் விர்ஜீனியா ரேவல் இன்னொருத்தி என் மகள் எல்லின் அவளை பாண்டல் என்று கூப்பிடுவோம்
ம்ம்ம்... நேற்று இரவு ஒரு இளைஞன் காரில் வந்து வெளிப்புறமாக இறங்கி இருக்கிறான், மண் சகதி பட்ட காலணிகளை கழற்றி வைத்து இருக்கிறான், மாளிகைக்கு வெளியே உள்ள காலடித்தடம் சரியாக பொருந்துகிறது!!
அவன் பெயர் என்ன?
ஆண்டனி கேட். என் சந்தேகம் என்னவென்றால் அவன் குற்றவாளியாக இருக்கும் பட்சத்தில் ஏன் ஓடிப் போகவில்லை.?
மன்னிக்கவேண்டும் பிரபு ஆண்டனி என்பவர் உங்களை சந்திக்க வந்துள்ளார்.
?
?!
குட் மார்னிங் ஜென்டில்மேன் இடையூறாக வந்ததற்கு மன்னிக்கவும் உங்களுக்கு உதவி செய்யலாம் என்று வந்தேன் நேற்று இரவு 11-15 மணிக்குஉங்கள் மாளிகையில் அத்துமீறி வந்துவிட்டேன் பிரபு கேட்டர்ஹாம். அப்போது துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது.
என்ன ஆச்சரியம் நீங்கள் மிஸ்டர் லோமாக்ஸ் சரிதானே நேற்று உங்களிடம் இருந்து ஒரு அழைப்பு கடிதம் எனக்கு வந்தது?
அப்படி எதுவும் இல்லையே? நேற்று நடுஇரவு இங்கே தோட்டத்திற்கு ஏன் வந்தீர்கள் என்று விளக்கமாக சொல்ல முடியுமா?
மிகவும் நல்லது. என் நண்பன் ஜிம்மி மெக்கார்த் என்னிடம் கொடுத்த ரகசிய வேலையை இப்போது சொல்கிறேன். சிறிதுகாலம் அவனுடைய பெயர் அடையாளத்தை நான் பயன்படுத்தியதற்கு மன்னிக்கவேண்டும்.

சிறிது நேரம் கழித்து....




COMICS PDF TIMES



யாரது.? மிஸ்டர் ஆண்டனியா.? உங்களை மீண்டும் சந்தித்ததில் மகிழ்ச்சி.
சிம்னி மாளிகையில் உங்களை சந்திப்பது எனக்கும் சந்தோஷமே மிஸஸ்.ரேவல்.
இவர் உனது நண்பரா விர்ஜினியா. பார்க்க அழகாக இருக்கிறார் நம்மோடு ஒருவாரம் தங்கி போகச் சொல்லேன்.
நாகரீக பெண் வெர்ஜீனியாவுக்கு இப்படி ஒரு நாட்டுப்புற ஆசாமி நண்பனா .என்னவொரு அசாத்திய ஒற்றுமை மிஸ்டர் பேட்டில் அவனைப் பார்த்தால் ஒரு அப்பாவி போல் தெரியவில்லையே?
எனக்கு அவன் நல்லவனாக தான் தென்படு- -கிறான் எதற்கும் தென்னாப்பிரிக்க அதிகாரிகளிடம் அவனைப் பற்றி விசாரிக்கிறேன்.
என்னுடைய கேள்வி என்னவென்றால் இளவரசர் மைக்கேல் இறப்பதால் யாருக்கு லாபம்?
நிச்சயமாக மிஸ்டர்.ஜசக்டீன் இல்லை .அவர் இங்கேதான் வருகிறார் நான் கிளம்புகிறேன்.
வாருங்கள் மிஸ்டர்.ஜசக்டீன் உங்கள் அரசரை இழந்ததால் உங்கள் நிலைமை சிக்கல்தான்.
ஸ்லோவாக்கியா நாட்டின் அரியணைக்கு உரியவரை உடனே கண்டுபிடிக்க வேண்டும். அரசர் இல்லாமல் என் வியாபார ஒப்பந்தங்கள் செல்லாதது ஆகிவிடும்.
நல்லது எனக்குத் தெரிந்தவரை இளவரசர் நிக்கோலஸ் பொருத்தமானவர்.
எனக்கு அவரைத் தெரியாது? அவரை பற்றி உங்களுக்கு தெரியுமா?
அவர் இளவரசர் மைக்கேலின் உறவினர், ஆக்ஸ்ஃபோர்டில் இருந்து வெளியேற்றப்பட்ட அவர் காங்கோ நாட்டுக்கு சென்றார், பின் இரண்டு வருடம் அவரைப் பற்றிய தகவல் இல்லை, இப்போது அவர் அமெரிக்காவில் இருப்பதாக செய்தி?



என்ன? நிச்சயமாக தான் சொல்கிறாயா? பிரெஞ்சு நகை திருடன் கிங் விக்டர் இங்கிலாந்துக்கு வந்திருக்கிறானா? இது எல்லாவற்றையும் மாற்றி விடுமே? தொடர்ந்து விசாரித்து எனக்கு தகவல் கொடு!!
கிங் விக்டர் நம் நாட்டில் என்ன செய்கிறான்?
ஏன் அது உங்களுக்கு தெரியாதா?
அது கோகினூர் வைரம் சம்பந்தப்பட்டது...
ஷ்ஷ்ஷ்! மெதுவாக பேசு கிழவா!!
விடை தெரியாத கேள்விகள் ஏராளம்? ஆனால் ஒருவேளை கிங் விக்டர் இளவரசர் மைக்கேலை சுட்டுக்கொன்று இருப்பானோ?
ஷ்ஷ்ஷ்!! மெதுவாகப் பேசு டியர் பேட்டில் அருகில் தான் இருக்கிறார் புத்திசாலித்தனமாக யோசி...
இளவரசர் மைக்கேலின் உதவியாளன் போரிசிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்.
நிச்சயமாக! போரிஸ் இளவரசரை கடைசியாகப் பார்த்தது எப்போது?
அவரது அறைக்கு அடுத்த அறையில் தான் நான் தூங்கினேன். அவர் மாடியை விட்டு கீழே இறங்கிய சத்தம் கேட்கவில்லை. ஒருவேளை எனக்கு மயக்க மருந்து கொடுத்து இருக்க வேண்டும். என் இளவரசரை காப்பாற்றத் தவறி விட்டேன்.
அமைதி போரிஸ்!!
செய்வதை விட சொல்வது சுலபம் இனி அவனை பழிவாங்காமல் நான் தூங்க மாட்டேன் அவனை கண்டுபிடித்து அவன் இதயத்தை கத்தியால் கிழிப்பேன்.
இளவரசர் மேல் அதிக அன்பு கொண்டவன். கொஞ்சம் முரட்டு சுபாவம்.


பிரபு கேட்டர்ஹாமுக்கு உன்னை மிகவும் பிடித்து விட்டது...
ஆனால் தலைமை போலீஸ் அதிகாரி பேட்டில் என்னை முழுமையாக நம்பவில்லை . நேற்று இரவு சம்பவத்திற்கு என்னிடம் சரியான அலிபி இல்லை .
அது இருக்கட்டும் நீ எப்போதாவது ஸ்லோவாக்கியா நாட்டில் வசித்து இருக்கிறாயா?
நீ எப்போதாவது இளவரசர் ஓபோலோவிச்சை சந்தித்து இருக்கிறாயா
ஆமாம், அங்கே தூதரான எனது கணவருடன் வசித்தேன் ஏன் கேட்கிறாய்?
நிச்சயமாக.. அவர் ஒரு கொடூரமான மனிதர், நான்மணமாகி கணவருடன் வாழ்வது தெரிந்தும் தன்னை மணந்துகொள்ள கேட்டவர்.
இங்கே கொல்லப்பட்ட மனிதரை நீ இன்னும் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன்?
இன்னும் பார்க்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை, உங்களுக்கு ஏன் இதில் ஆர்வம்?
ஏனென்றால் பிரபு ஸ்டெயின்லாஸ் வேறுயாருமல்ல இளவரசர் மைக்கேல் தான் மாறுவேடத்தில் வந்திருக்கிறார்.
என்ன? அதனால் தான் என்னை சந்திப்பதை தவிர்த்தாரா? அவர் ஒரு ஏமாற்றுக்காரர் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?
நேற்று இரவு நான் இங்கே வந்தபோது துப்பாக்கி வெடித்த பின் ஒரு விளக்கு எரிந்தது.
மாளிகையில் உள்ள யாருக்கும் சத்தம் கேட்கவில்லை என்பது பேட்டிலின் கணிப்பு. இது என் ஆர்வத்தை தூண்டுகிறது.
கேள்வி கேட்பது என் முறை. நீங்கள் ஆன்டனி கேடா? அல்லது ஜிம்மி மெக்கார்த்தா?


அதன் பிறகு....
அதைப் பற்றி கவலைப்படாதே இதுவரை உன்னை பார்த்ததில்லை என்று பாசாங்கு செய்ய மாட்டேன்!!
என் உயிரைக் காப்பாற்ற, உன் பால்யகால நண்பன் என்று மற்றவர்களிடம் சொன்னதற்கு இதுவரை நன்றி சொல்லவில்லை...
உனக்குத் தெரியுமா? விர்ஜீனியா ரேவல் என்ற பெயரில் எழுதப்பட்ட காதல் கடிதங்கள் இப்போது இல்லை அழிந்துவிட்டது யாரோ உன் பெயரை உபயோகப் படுத்தி எழுதி இருக்கிறார்கள்?
எனக்கு பசிக்கிறது!! வா போய் பாண்டலும் கேட்டர்ஹாம் பிரபுவும் எங்கு இருக்கின்றனர் என்று பார்ப்போம்...
பாண்டல் இது என் நண்பர் ஆண்டனி...
விர்ஜீனியா எங்கே பிடித்தாய் இந்த அழகிய ஆண்மகனை? ஏதாவது பேசுவாரா?
நிச்சயமாக... உன்னிடம் ஒரு கேள்வி இந்த மாளிகையின் முடிவில் இடதுபக்கம் உள்ள இரண்டாவது அறையில் இருப்பது யார்?
என்ன ஒரு அசாதாரணமான கேள்வி. அங்கே எங்கள் பிரெஞ்சு பணிப்பெண் மிஸ்புருனி தங்கியிருக்கிறாள்.
அங்கே பார் அந்த தாடிக்காரரை எனக்குத் தெரியும் பெயர் பேரோன் லாலிபாப்.
லாலி பாப்பா? வேடிக்கையான ஆள் நீங்கள். வா விர்ஜீனியா இது சாப்பாட்டு நேரம்.


என்ன அது?
?
யார் நீ? இங்கே என்ன செய்கிறாய்?
வழிதவறி வந்து விட்டேன் சார். இந்த மாளிகையை பார்த்தேன்வழி கேட்க வந்தேன்
இன்னொரு சந்தேகத்திற்கு இடமான அந்நியன்? பேச்சில் பிரெஞ்சு வாடை நன்றாக தெரிகிறது...?
டைனிங் அறையில் மதிய உணவு வேளையில்...
என்னை மன்னியுங்கள் பேரான் நான் ஜிம்மி மெக்கார்த் இல்லை.நான் உங்களிடம் கொடுத்த அந்த டைரி இப்போது எங்கே?
ம்ம்ம்... இளவரசர் அதை எரித்து இருப்பார் என்று நினைக்கிறேன்.
இந்த கொலைக்கு காரணமே அந்த டைரி என்று நினைக்கிறேன் வரும் புதன் அன்று அதை எப்படியாவது பத்திரிகை- -யாளரிடம் கொடுக்க நினைக்கிறேன்.
ஆனால் அதுதான் அழிக்கப்பட்டுவிட்டதே?
நான் அப்படி நினைக்கவில்லை பேரான். அது இங்கேதான் எங்கோ ஒளித்து வைக்கப் பட்டுள்ளது!!!
?!


மதிய உணவுக்குப் பின்...
சாப்பிட்ட பின் நடந்தால் நன்றாக ஜீரணமாகும் தனிமைக்கு ஏகாந்தமான இடம்....
வாருங்கள் மிஸ்டர் ஆண்டனி.நான் தனியே ஒதுங்கி இருந்ததை பார்த்து விட்டீர்களா?
சிம்னி மாளிகையில் நடந்த குற்றத்தைப் பற்றி சிந்தித்துக்கொண்டு இருக்கிறீர்களா மிஸ்டர் ஃபிஷ்.?
கணிசமான மர்மம் இதில் அடங்கியுள்ளது இறந்தவர் ஒரு இளவரசர் என்றும் அதனால்தான் அந்த பேரோன் லோலோ பிரிட்சி இங்கே இருக்கிறாரோ?
நாளை நடக்கும் விசாரணைக்கு அனைவரும் வரவேண்டும் அதன்பின்னரே நமக்குத் தெரியும்
ஒருவேளை ஸ்காட்லாந்து யார்டு அனைவரையும் குற்றம் சாட்டலாம்
ஆமாம் உன்னை சந்தித்ததில் மகிழ்ச்சி பாண்டல். என்னுடன் படகு சவாரி செய்ய வருகிறாயா?
நமது அமெரிக்க விருந்தினர் ஃபிஷ்ஷை வருத்தமடைய செய்துவிட்டீர்கள். வேடிக்கையான மனிதர் அப்படித்தானே?


உங்களது புகழ்பெற்ற குடும்பத்தைப் பற்றியும் பிரம்மாண்டமான இந்த மாளிகையை நினைத்தும் நீ பெருமை கொள்ளலாம்.
இங்கே எனக்கு பொழுதே போகவில்லை. ஸ்காட்லாந்து கோவெஸ். டுவாவெல் மாளிகைகளே எனக்கு பிடித்தமானவை.



உங்கள் பிரஞ்சு பணிப்பெண் புருனி பற்றி கொஞ்சம் சொல்லேன். எங்கே பிடித்தாய் அவளை?
ஒரு நிறுவனம் மூலமாக வந்தாள். அதற்குமுன் பிரட்வில் சீமாட்டியின் பணிப்பெண்ணாக டினார்ட்டில் பத்து வருடம் வேலை செய்தவள். என் சகோதரி அவளை அழைத்து வந்தாள்.
அதோ பில் என்னை தேடி வருகிறான்!! நாம் திரும்பிச் செல்லலாம்!!
எங்களுடன் விளையாடுகிறீர்களா? செவ்விந்தியர் விளையாட்டு விளையாட தெரியுமா?
ஓரளவுக்கு . மண்டை தோலை உரிப்பது தானே? அப்போது.... அப்போது இப்படித்தான் கத்த வேண்டும்.
எங்களுக்கு கதைகள் சொல்வீர்களா?
ஹிஹி!
ஹிஹி!
எங்களுடன் விளையாட வந்தீர்களா பேட்டில்? நான் கொஞ்சம் வெளியூர் சென்று வர விரும்புகிறேன்.
அது எங்கே என்பதைப் பொறுத்து மிஸ்டர் ஆண்டனி.?
பிரட்வில் சீமாட்டியின் கோட்டைக்கு டினார்டுவரை.



COMICS PDF TIMES



COMICS PDF TIMES


நான் அவனை பிடிக்கிறேன்!!
?
நில்!!
ஓஹ்!!
யார்?? மன்னிக்கவேண்டும் மிஸஸ்.ரேவல். திருடனுக்கு பதில் உங்களை பிடித்து விட்டேன்.
மிஸ்டர் ஃபிஷ்? திருடன் தப்பி ஓடுகிறான்!! பில்லால் அவனை பிடிக்க முடியாவிட்டால்...
இந்த அறையில் ஏதோ விஷமத்தனம் நடந்திருக்கிறது!!
அப்பா!! இது மிகவும் சுவாரசியமாக இருக்கிறது. குழப்பத்தை பாருங்கள். இங்கே எத்தனை பேர் வந்தனர் விர்ஜினியா?
ஒரே ஒருவன் தான் அவனும் ஓடிவிட்டான்!



மறுநாள் மதியம்....
ஓஹ்!! மிஸ்டர் பேட்டில் நான் சொன்னபடி திரும்பி வருவேனா என்று உறுதிப்படுத்திக்கொள்ள வந்தீர்களா.?
அப்படியெல்லாம் இல்லை, நான் லண்டன் கிளம்புகிறேன்!!
பிரட்வில் சீமாட்டியிடம் இருந்து தகவல் ஏதாவது கண்டு பிடித்தாயா?
ஒன்றும் இல்லை. பணிப்பெண் புரூனி மிகவும் நல்லவள். சிம்னி மாளிகையின் பின்புறம் சுற்றித் திரிந்த அந்த சந்தேகத்துக்கிடமான பிரஞ்ச் ஆசாமியை பற்றி கவனம் செலுத்த போகிறேன்....
யாரை சொல்கிறாய்? செல்லசையா? அவன் ஒரு விற்பனை பிரதிநிதி நாங்கள் அவனை கண்காணித்து வருகிறோம் யாரையாவது தேட வேண்டும் என்றால் பிரபல மாறுவேட நிபுணன் நகை திருடன் கிங் விக்டரை தேடி கண்டுபிடி!!!
கிங் விக்டரா? ம்ம்ம்... அவனைப் பற்றி கேள்விப்பட்டு இருக்கிறேன். இப்போது அவன் சிறையில் இல்லையா?
அதைத்தான் நாங்கள் தெரிந்து கொள்ள நினைக்கிறோம் . எங்களுக்குத் தெரிந்தது எல்லாம் அவன் ஒரு பெரிய குற்றத்திற்கு திட்டமிட்டுள்ளான் என்பதே.
மீண்டும் சிம்னி மாளிகையில்....
அடக்கடவுளே??!!! புரிந்துவிட்டது தவறான இடத்தில் நின்று தவறான ஜன்னலை கவனித்து இருக்கிறேன்.
டிரெட்வெல்? இந்த மாளிகையின் மேற்குப் பகுதியில் மூன்றாவது அறையில் தங்கி இருப்பது யார்?
அது அந்த அமெரிக்கர் ஃபிஷ்ஷின் அறை, சார்!!


ஹலோ மிஸ்டர் ஜசக்டீன்...
மிஸ்டர் ஆண்டனி... நேற்று இங்கே இருந்திருந்தால் திருட்டு முயற்சி நடந்ததை பார்த்து இருக்கலாம், ஆலோசனை அறையில் யாரோ எதையோ தேடிக் கொண்டிருந்தனர் நடந்தது எதுவும் தெரியாமல் நான் தூங்கி கொண்டு இருந்தேன்.
உண்மை-யாகவா!
கற்றுக்குட்டி திருடர்கள். இதனால் போலீஸ் எங்களை இங்கிருந்து போக விடவில்லை. விருந்தினர் மாளிகையிலேயே கைதியை போல் இருக்கிறோம்.
என்ன ஆண்டனி சீக்கிரமே திரும்பி விட்டீர்கள், நேற்று நடந்த சாகச நிகழ்ச்சிகளை கேள்விப்பட்டீர்களா?
நான் திருடனைப் பிடிப்பதற்கு பதிலாக மிஸஸ் ரேவலை பிடித்துவிட்டேன். கற்பனை செய்து பாரேன்?
பட்லரிடம் நமக்கு டீ கொண்டு வரச் சொல்கிறேன்.
டீ குடித்த பிறகு போட் ஹவுசுக்கு வாருங்கள் நானும் பில்லும் உங்களிடம் சொல்ல நிறைய சங்கதி உள்ளது.
...மிகவும் முரண்பாடாக இருக்கிறது என்றே நான் சொல்வேன் நீ என்ன நினைக்கிறாய்?
திருடர்களின் செய்கை பொருத்தமில்லாமல் இருந்தது அலங்கார விதானத்தில் குறிப்பாக எதையோ தேடுவது போல் இருந்தது.
திருடர்கள் இருவர் என்று நீ சொல்கிறாய் பில் துரத்தியது ஒருவனைத்தான் அப்படியானால் திருடர்களின் செய்கை பொருத்தமில்லாமல் இருந்தது அலங்கார விதானத்தில் குறிப்பாக எதையோ தேடுவது போல் இருந்தது. இரண்டாமவன் மாளிகையில் இருக்கும் யாரோ ஒருவர்தான்
அது நடந்தது நள்ளிரவில் ஆனாலும் ஹிராம் ஃபிஷ் வழக்கமான உடையில் இருந்தார்.ஜசக்டீன் தூங்கி விட்டதாக சொன்னார். இருவரும் ஓரளவு சந்தேகத்துக்கு உரியவர்களே.



அன்று இரவு....
ஷ்ஷ்ஷ்... சத்தம் போடாதே!!
நேற்று எதை தேடினார்களோ அதைத்தேடி இன்று இரவும் வருவார்கள் என்று நான் நிச்சயமாகச் சொல்வேன்.
தலைமை போலீஸ் அதிகாரி பேட்டில் லண்டன் போய்விட்டதால் அவர்கள் பாதுகாப்புக்கு யாருமில்லை என்று நினைக்கலாம்.
அதிகாலை மணி 2-30 ஆகிறது. எனக்கு தூக்கம் வருகிறது. எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருப்பது?
பொறுமையாக இரு!!
எனக்கு ஏதோ சத்தம் கேட்டது!!
நீயா? அன்று வழிதவறி வந்தவன்?
!
?
யாரும் அசையக் கூடாது!!
பேட்டில், நீங்கள் லண்டனில் இருக்கிறீர்கள் என்று நினைத்தேன்...
தவறு ஆண்டனி என் இலாகா நண்பரை சந்திக்க திரும்பிவிட்டேன். இவர் பாரிசில் இருந்து வந்துள்ள பிரெஞ்சு பாதுகாப்புத்துறை அதிகாரி மிஸ்டர் லெமாய்ன்.


இந்தப் பிரச்சனை ஏழு வருடங்களுக்கு முன் ஆரம்பித்தது ஸ்லோவாக்கியா நாட்டில் பிரபு ஸ்டைல்பிட்ச்சின் உதவியுடன் மன்னர் ஆட்சியை ஏற்படுத்த நினைத்தது ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பல அரச குடும்பத்தினர் ரகசிய பேச்சு வார்த்தைக்காக இங்கே சிம்னி மாளிகைக்கு வந்தனர்.
உண்மை தான் ஆனால் அன்று இரவு இங்கே ஒரு பொருள் காணாமல் போயிற்று அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் ஒருவரால் நிகழ்த்தப்பட்ட திருட்டு. அவர் திறமையான திருடனும் கூட.
பிரபல திருடன் கிங் விக்டரை பற்றி கேள்விப்பட்டது உண்டா ஐந்து மொழிகளில் தேர்ச்சி பெற்றவன் திறமையான மாறுவேடதாரி. பாரிஸில் கேப்டன் ஓ நீல் என்ற பெயரில் தொடர் கொள்ளைகளை நடத்தியவன்.
எங்கள் பிரெஞ்சு பாதுகாப்பு துறையால் ஓ நீலும் கிங்விக்டரும் ஒரே ஆள் தான் என்று நிரூபிக்க முடியவில்லை. ஆனால் அப்போது ஏஞ்சலா மேரி என்ற நடிகை தனது வசீகரமான அழகால் மக்களை கிறங்கடித்த பிரபலமாக இருந்தாள் என்றும் தெரியும். அவள் கிங் விக்டரின் கூட்டாளி என்று நாங்கள் கருதினோம்.
அந்த சமயத்தில் ஸ்லோவேகியா மன்னரான நாலாம் நிகோலஸ்சை வரவேற்க பாரிஸ் நகரம் தயாராகிக் கொண்டு இருந்தது. அவரைப் பாதுகாக்கும் பெரும் நெருக்கடியில் எங்கள் பிரெஞ்சு பாதுகாப்புத்துறை இருந்தது. ஏனென்றால் புரட்சிகர போராளிக் குழுவான செங்கரம் அமைப்பு ஏஞ்சலா மேரிக்கு லஞ்சம் கொடுத்ததாக தகவல்.
அவளை என்ன செய்யச் சொன்னார்--கள்?
இளவரசரை மயக்கி தன் கவர்ச்சி வலையில் வீழ்த்த வேண்டும்.
ஆனால் செங்கரம் அமைப்பு நினைத்ததை காட்டிலும் அவள் லட்சியம் வேறாக இருந்தது...
உண்மையில் ஏஞ்சலா தனது கட்டழகு கவர்ச்சியில் அரசரை கட்டிப் போட அவரும் அவள் மேல் காதலில் விழுந்தார்!!


பாரீஸின் கவர்ச்சிநடிகை ஸ்லோவாக்கியா நாட்டின் ராணி இரண்டாவது வராகா என்று அழைக்கப்பட்ட கதை. அதன்பின் நடந்தது அனைவரும் அறிவார்கள். அவள் கனவு விரைவில் கலைந்தது. செங்கரம் போராளி அமைப்பு புரட்சியைத் தூண்டி அரசர் மற்றும் அரசியை கொன்று அவர்கள் உடலையும் சிதைத்து விட்டனர்.
அழகிய கதைக்கு ஒரு கொடூரமான முடிவு!!
ஆனால் ஏஞ்சலாமேரி இன்னும் கிங் விக்டர் என்கிற கேப்டன் ஓ நீலுடன் தொடர்பில் இருப்பதாக உறுதியான தகவல் கிடைத்துள்ளது ரகசிய குறியீடுகளில் தகவல் பரிமாறிக் கொள்கின்றனர். ஒருவேளை அந்தக் கடிதங்கள் எங்கள் கைகளில் கிடைத்தால் மாஜி ராணி ஏஞ்சலா பிரிட்டிஷ் தூதரகத்தில் இங்கிலாந்து அரசியின் பெயரை உபயோகப்படுத்துகிறாள்.
என் பெயரைக் கூட பயன்படுத்தி- -யிருக்கிறாள்
அடேங்கப்பா!!
நீங்களே பாருங்கள் நாலாம் நிகோலசும் அரசி வராகாவும் ஏழு வருடங்களுக்கு முன்பே பேச்சுவார்த்தைக்காக சிம்னி மாளிகைக்கு வந்த போது புகழ் பெற்ற கோஹினூர் வைரம் மணிமுடியில் இருந்து எடுக்கப்பட்டு அதற்கு பதில் போலி வைரம் பதிக்கப்பட்டுள்ளது.
அசலை எடுத்து அதேபோல் போலியை வைப்பதில் கிங் விக்டர் கை தேர்ந்தவன் யாராலும் கண்டுபிடிக்க முடியாது ராணி ஏஞ்சலா மேரி அதை இந்த மாளிகையில் எங்கேயோ ஒளித்து வைத்திருக்கக் கூடும் என்று நம்புகிறோம் நிச்சயம் அது இங்கே தான் இருக்கும்.
நம்பவே முடியவில்லை!!!
இத்தனை வருடங்கள் கழித்தா?
இந்த நிகழ்ச்சி நடந்த இரண்டு வாரத்திற்கு பிறகு ஸ்லோவேகியா நாட்டில் புரட்சி வெடித்தது அரசரும் முதல் மகாராணியும் படுகொலை செய்யப்பட்டனர் கேப்டன் ஓ நீல் கைது செய்யப்பட்டு சிலகாலம் பாரீஸில் சிறையில் அடைக்கப்பட்டான் துரதிஷ்டவசமாக அவன் வசம் இருந்த ரகசிய குறியீடு கடிதங்கள் திருடு போயின.
கடிதங்களை எடுத்த திருடன் ஆப்பிரிக்கா சென்றவன் அங்கேயே இறந்தான். அதற்கு முன் அதை தன் நண்பனிடம் கொடுத்து விட்டான். அவன் பெயர் ஜிம்மி மெக்கார்த்.
ஆனால் அந்த டைரியில் வைரம் எங்கே ஒளித்து வைக்கப்பட்டுள்ளது என்பதை ரகசியக் குறியீடுகளால் எழுதி இருக்க வேண்டும்.
கடிதங்கள் திருட்டுப் போன விஷயத்தை நாங்கள் மறைத்துவிட்டோம் ஆனால் இங்கே வந்த பிரபு ஸ்டைல் பீச்சின் நினைவுகளில் மங்கலாக இருந்த அந்த நினைவுகள் சிம்னி மாளிகையை பார்த்ததும் நன்றாக ஞாபகம் வந்துவிட்டது.


இருக்கலாம் ஆனால் இந்த கடித விவகாரத்தை வைத்து பிரபு ராணியை பிளாக்மெயில் செய்து இருக்கலாம்.
பிரபு ஸ்டைல்பிட்ச்சுக்கும் பல ரகசியம் தெரியும் டைரியை என்னிடம் கொடுத்த ஜிம்மி சொன்னதாவது பாரிஸில் ஒரு திருடர் கும்பலிடமிருந்து பிரபுவை காப்பாற்றினேன் என்று .அவன் மேல் நம்பிக்கை கொண்ட பிரபு கோஹினூர் வைரம் எங்கே இருக்கிறது என்றும் கிங் விக்டரின் ஆட்கள் அவரை கொல்ல முயன்றதாகவும் சொன்னாராம். அப்போது எனக்கு அது புரியவில்லை.
திருடர்களில் புகழ் வாய்ந்தவன் கிங் விக்டர். இதுவரை அவன் யாரையும் கொன்றதில்லை.
ஒருவேளை அவன் வைரத்தை தேடும்போது யாராவது அவனுக்கு ஆச்சரியத்தை கொடுத்தால்? அவன் நிச்சயமாக இங்கிலாந்தில் தான் இருக்கிறானா?
எங்களிடம் இருந்து தப்பி அமெரிக்கா சென்றவன் அங்கே தன் பெயரை ஸ்லோவாக்கியாவின் இளவரசர் நிக்கோலஸ் என்று மாற்றிக் கொண்டான்.
இளவரசர் நிக்கோலஸ் பல ஆண்டுகளுக்கு முன்பே காங்கோவில் இறந்துவிட்டதாக வதந்தி பரவியிருந்தது. அமெரிக்கர்களை சரிக்கட்டிய கிங்விக்டர் அவர்களிடமும் பண மோசடி செய்து தப்பினான். விரைவில் அவன் வைரத்தை தேடி இங்கே வருவான்.
இதை ஏன் முன்னரே சொல்லி எங்களை எச்சரிக்கை செய்யவில்லை லெமாய்ன்?
மன்னிக்கவும் பேட்டில் ரகசிய பணிக்காக வந்த நான் உங்கள் கண்ணில் படக்கூடாது என்று இருந்தேன்.
அன்று இரவு உங்களைத்தான் துரத்தி வந்தேனா?
ஆமாம் மிஸ்டர் பில் மாளிகையில் புகுந்து எதையோ தேடியவனை கவனித்துக் கொண்டு இருந்தேன். நீங்கள் வரும் ஓசையை கேட்டு ஓடி ஒளிந்து கொண்டான்.
அப்போது திடீரென்று அங்கே வந்த நாங்கள் உங்களை பார்த்தோம்!!
அப்படியானால் அது நம் விருந்தினர்களில் ஒருவர் என்று நினைக்கின்றீர்--களா?
இருக்கலாம் ! இளவரசர் மைக்கேலின் உதவியாளன் போரிஸ் பற்றி என்ன நினைக்கிறாய்?
அவனைப் பற்றி கவலை வேண்டாம் லெமாய்ன். நான் அவனை வேலைக்கு அமர்த்தி உள்ளேன் அவனை மிகவும் நம்புகிறேன்!!


இரவு முடிந்தது விடிய ஆரம்பித்து விட்டது. கடைசியாக ஒரு விஷயம் மிஸ்டர் ஆண்டனி நான் லண்டன் சென்றபோது ரயில் நிலையத்தில் ஒரு பெட்டியில் உடல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அது ஹோட்டல் பிளிட்ஸ் இன் பணியாளன் குசெப்பி என்று நிச்சயமாகியுள்ளது.
இதை ஏன் என்னிடம் சொல்கிறீர்கள்? அவன் அங்கேயே கொல்லப்பட்டானா? அல்லது யாராவது சுட்டபின் அந்த உடலை அங்கே போட்டனரா? நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?
சுடப்பட்டு இருக்கிறான் மிஸ்டர்.ஆண்டனி, சுவாரசியமான அனுமானம். உங்களுக்கு வேறு யோசனை ஏதாவது இருக்கிறதா?
ம்ம்ம் வந்து... உண்மையில் அதை செய்தது நான் தான், அதாவது உடலை பெட்டியில் வைத்து ரயில்நிலையத்தில் போட்டது. செங்கரம் அமைப்பினர் அதை செய்திருக்கலாம் என்பது என் யூகம். முழுக்கதையையும் உங்களிடம் சொல்வது நல்லது என்று நினைக்கிறேன்....
அதன் பின்...
நீங்கள் மிகவும் கவனமுடன் இருக்க வேண்டும் சார் . இடைப்பட்ட நாட்களில் சிக்கலில் மாட்டி இருக்கலாம்? உங்களிடம் இருந்து திருடப்பட்ட கடிதங்களை நான் கண்டுபிடிக்கிறேன் அதில் ஒரு கடிதம் இந்த. சிம்னி மாளிகை விலாசத்துடன் இருந்ததாக சொன்னீர்கள் சரிதானே?
உண்மைதான் கடைசியாக எழுதிய கடிதத்தில் அது இருந்தது. நிச்சயம் அந்த வைரம் இருக்கும் இடத்தை பற்றி அதில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
செங்கரம் அமைப்பு குசெப்பியை அனுப்பி டைரியை எடுத்து வரச் சொல்லி இருக்க வேண்டும். அதற்கு பதில் அவன் கைகளில் கடிதங்கள் சிக்க அதை வைத்து அவன் மிஸஸ்.ரேவலை பிளாக்மெயில் செய்து பணம் பறிக்க நினைத்திருக்கிறான். இவனை துரோகியாக நினைத்து அவர்கள் கொன்று விடுகின்றனர், இப்படித்தான் நடந்திருக்கும்.
அப்படியானால் வெர்ஜினியாவின் பெயர் பொறித்த துப்பாக்கி? சாதாரண திருடன் அவ்வளவு புத்திசாலியாக இருப்பானா?
செங்கரம் அமைப்பும் கிங் விக்டரும் சேர்ந்து வேலை செய்தால் கூட நான் ஆச்சரியப்பட மாட்டேன் ஆனால் செங்கர அமைப்பு அந்த கடிதங்களை படித்திருந்தால், கோகினூர் வைரத்தை எங்கே தேட வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும்!!
இப்போது நீங்கள் உங்கள் திட்டத்தை சொல்லப் போகிறீர்கள் என்று நினைக்கிறேன்!!


ஒரு நல்ல குளியலும் சுவையான சாப்பாடும் தான் இப்போது என் தேவை!!
ஆங்...?? இதை இங்கே வைத்தது யார்??? என் தலையே வெடித்துவிடும் போலிருக்கிறது...
இங்கே என்ன நடக்கிறது என்றே எனக்கு புரியவில்லை இவை கேப்டன் ஓ நீலுக்கும் விர்ஜினியாவுக்கும் அனுப்பப்பட்ட கடிதங்கள்?!
காலை 10 மணி....
போலீஸ் தலைமை அதிகாரி பேட்டில் உங்களுடன் பேசினாரா அப்பா?
இங்கிருக்கும் எல்லோரும் சிம்னி மாளிகையிலேயே சிறிது காலம் தங்க வேண்டும் என்று சொன்னார் எனக்குத்தான் படபடப்பாக இருக்கிறது!!
நான் வாதம் செய்யவில்லை இது சாப்பாட்டு வேளை அல்லவா??
என்ன சொல்கிறீர்கள் என்று எனக்கு புரிந்துவிட்டது!! நேற்று இரவு நான் பயந்து கொண்டே தூங்கினேன்
பெண்களே இன்று என்ன செய்யப் போகிறீர்கள்? ஆமாம் பணிப்பெண் புரூனி இருக்கிறாளா இதுவரை நான் அவளை பார்க்கவில்லை!!
அவள் சரியான சோம்பேறி. நேரத்திற்கு வருவதில்லை புதிய ஆள் கிடைப்பது கடினம் பேசாமல் நான் மீண்டும் திருமணம் செய்தால்தான் சுலபமாக இருக்கும்.
அப்பா நீங்கள் ஏன் விர்ஜீனியாவை திருமணம் செய்து கொள்ளும்படி கேட்கக்கூடாது.? அவள் எனக்கு சித்தி ஆகிவிட்டால் கட்டழகு ஆண்டனி அவன் கவனத்தை என் மேல் திருப்பக் கூடும்.

காலை சிற்றுண்டிக்கு பின்...





சிறிது நேரத்திற்கு பிறகு...
ஹலோ விர்ஜீனியா! கடைசியில் உன்னிடம் பேச வாய்ப்பு கிடைத்துவிட்டது!!
நல்லது பில் ஆனால் தயவு செய்து உன்னை மணந்து கொள்ளும்படி கேட்டு விடாதே!!!
ஏன் முரண்டு பிடிக்கிறாய் விர்ஜீனியா? சம்மதம் சொன்னால் மிகவும் சிறப்பாக இருக்கும்...
இந்தப் பெட்டி அந்த காரில் இருந்து விழுந்துவிட்டது...
ஷ்ஷ்ஷ்ஷ்!!
!?
ஐசக்டினின் கார் திரும்பி வந்தால் எனக்கு குரல் கொடுங்கள்!!
சீக்கிரம் அது வருகிறது!!
எனக்கும் சத்தம் கேட்டது...
?
இந்தப் பெட்டி கீழே விழுந்ததை நாங்கள் பார்த்தோம்...
பயணம் இனிதாகட்டும் மிஸ்டர் ஐசக்டின்!!


ஜார்ஜ் லோமாக்ஸ்சின் மாளிகை.
காணாமல் போன புகழ் பெற்ற கடிதங்கள் ஆண்டனியின் அறையில் கிடந்தது. அதைப் படித்து புரிந்து கொள்ள முடியாமல் கிங் விக்டரே அதை திருப்பி வைத்திருக்க வேண்டும்.
அவை ரகசிய குறியீடுகளால் எழுதப்பட்டுள்ளன என்றா சொல்கிறீர்கள்.?
அந்த ரகசிய கடிதங்களின் புதிரை உடனடியாக அவிழ்க்க வேண்டும் இதற்காகவே பேராசிரியர் வைன் வுட் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் இருந்து வருகிறார். பில்லும் இங்கே வந்து சேர வேண்டும்.
நிச்சயமாக. நாம் இதில் தீவிரமாக இருப்பது கிங் விக்டருக்கு தெரியும்.புதிரை நாம் விடுவித்து வைரம் எங்கே என்று கண்டுபிடித்த பிறகு நம்மை தாக்க அவன் திட்டமிட்டு இருக்கக்கூடும்.
சிறிது நேரம் கழித்து சிம்னி மாளிகையில்...
ஐசக்டீன் ஏற்கனவே ரயில்வே ஸ்டேஷனுக்கு கிளம்பியது உங்களுக்கு தெரியுமா பேட்டில்.? மிகவும் வருத்தமாக இருந்தார்...
தெரியும் அவர் பெட்டியில் ஒரு துப்பாக்கியை லெமாய்ன் கண்டுபிடித்தார் லண்டனை சென்றடைந்ததும் அதிர்ச்சி அடைய போகிறார்.
என்னது? இளவரசர் மைக்கேலை ஐசக்டீன் கொன்றிருப்பார் என்று நான் சந்தேகிக்கவில்லை.
இது ஒரு சிறு ஆச்சர்யம்தான். பில்லை லோமாக்ஸ் திருப்பி அவர் மாளிகைக்கு வரச் சொன்னதாக சொல்ல முடியுமா.? அப்புறமாய் உள்ளே வந்து என்னை பாருங்கள்.
மன்னிக்கவேண்டும் நண்பர்களே நான் இங்கே இருக்க விரும்பினேன் ஆனால் லோமாக்ஸ் என்னை திரும்பி வரச் சொல்லிவிட்டார்.
அதுவும் நல்லதுக்குத்தான். பில்லும் கொஞ்சம் ஆர்வமாக இருந்தான் ஆனால் நீங்கள் பல ஆபத்துகளை எதிர் கொண்டாலும் மிக அமைதியாக இருக்கிறீர்கள்... உங்கள் உதவியாளன் போரிஸ் உங்களை சந்தித்தானா?
ஆமாம் .டோவர் விலாசமிட்ட கடித அட்டை ஒன்றை வைத்திருந்தான். ஒருவேளை அது ஐசக்டீன் பெட்டியிலிருந்து விழுந்திருக்கலாம்.


வாருங்கள் பேராசிரியர், வைன்வுட் புதிரை விடுவித்து விட்டார். S எங்களை ஏமாற்றி விட்டான். இங்கே தேடுங்கள் . ரிச்மாண்ட்.
நேராக 7
இடதுபுறம் 8
வலது புறம் 3.
S என்பது ஸ்டைல்பிட்ச்சாக இருக்கலாம். ஆனால் ரிச்மாண்ட்? ஞாபகம் வந்துவிட்டது ஆலோசனை அறையில் தொங்கும் ரிச்மான்டின் ஓவியம். இது பற்றி பாண்டலிடம் கேட்கலாம்.
நிச்சயமாக! அந்த ஓவியத்தின் பின்னால் ஒரு சுரங்கம் உள்ளது. ஆனால் வெளியே போகும் வழி இல்லை. பல வருடங்களுக்கு முன்னரே அது அடைக்கப்பட்டு விட்டது நாங்கள் அங்கேதான் விளையாடுவோம். வாருங்கள் காட்டுகிறேன்.
ரகசிய குறியீடு 7 அடி முன்னே இடதுபுறம் 8 அடி அதன் வலதுபுறம் மூன்று அடி...
?!?
சரியான இடத்துக்கு வந்து விட்டோம்.
அடக்கடவுளே!! நாம் ஏமாற்றப்பட்டு விட்டோம்...
நிச்சயம் இதுவும் ஒரு புதிர் தான்!!
சிறிய தையல் துணி மற்றும் RR என்று எழுதப்பட்ட காகிதம் ஒன்றும் புரியவில்லையே.?

பிறகு...


கவனி லெமாய்ன்!! எனக்கு ஒரு யோசனை, பேட்டிலை பிறகு வந்து பார்ப்பதாக சொல்.
பாவம் மனுசன்! அவரால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை, நான் போய் அவரை உற்சாகப்படுத்துகிறேன்.
அவசரமாக போகிறாயா?? நான் உடன் வருவதில் ஆட்சேபனை இல்லையே?
நான் காரோட்டும் வேகத்தை பார்த்து பலரும் பயப்படுவார்கள் கெட்டியாக பிடித்துக் கொள்ளுங்கள்!!
எங்கே போகிறீர்கள்?? நானும் கூட வரட்டுமா??
நான் ஒரு ரகசிய வேலையாக போகிறேன். ஒருவேளை முழுசாக அங்கே போய்ச் சேர்ந்தால்!!!
நான் கார் ஓட்டும் அழகு பற்றி ஏற்கனவே எச்சரித்தேன் அதனால்தான் என் அப்பா கூட வருவதில்லை.
என்னை ரயில்வே ஸ்டேஷனில் இறக்கிவிட முடியுமா??
நிச்சயமாக!
வயதான பெண்கள் உன்னுடன் வண்டியில் வந்தால் நேராக சொர்க்கத்துக்கு டிக்கெட் தான். ஆனால் எனக்கு இது பிடித்திருக்கிறது கடைசியாக இவ்வளவு வேகமாக நான் கார் ஓட்டியது ஆப்பிரிக்காவில் ஒரு யானை கூட்டம் என்னை துரத்திய போது.
அன்று இரவு சிம்னி மாளிகையில்..
ஆண்டனி அவரே திரும்பி வருவதாக சொன்னார் அப்பா. ஆனால், இரவு வெளியே தங்குவது பற்றி எதுவும் சொல்லவில்லை
எனக்கு அவனைப் பற்றி கவலை இல்லை டியர் அவன் ஒரு சாகச வீரன்!!
குட்நைட் லெமாய்ன்!!
குட்நைட் பெண்களே!!


?!
அத்துமீறி உள்ளே நுழைந்ததற்காக என்னை மன்னியுங்கள் பிரபு கேட்டர்ஹாம். உங்களை மிகவும் பயமுறுத்திவிட்டேன் உங்கள் விருந்தினர்கள் அனைவரையும் ஆலோசனைக்கு வரவழைக்க முடியுமா?
என்ன?? ஆனால்... ம்ம்ம்... சரி!
டோவரில் இருந்து பயணம் செய்து வந்தது உங்களை சோர்வடைய செய்து இருக்காது என்று நினைக்கிறேன் உள் அறையில் சென்று காத்திருங்கள் நான் சைகை செய்த பின் வந்தால் போதும்.
அதன் பின்...
கோஹிநூர் வைரம் இருக்கும் இடத்தை நான் யூகித்து விட்டேன். வரிசையாக தைக்கப்பட்ட தையல்கள் புத்தக வரிசையை குறிக்கின்றன . அந்த பொத்தான்கள் ஒரு உன்னதமான மனிதரை குறிப்பிடுகிறது. R என்ற எழுத்து நிச்சயம் ரிச்மான்டை குறிக்கிறது. வைரம் நிச்சயமாக நூலக புத்தகமான ரிச்மான்டின் வாழ்க்கை வரலாறு புத்தகத்தில் தான் இருக்க வேண்டும்.
அற்புதமான கண்டுபிடிப்பு!!
பிரெட்வெல் சீக்கிரம் வா!!
நான் சொன்னது நன்றாக வேலை செய்கிறது!!
பொறுமை நண்பர்களே ஏழு வருடங்களுக்கு பிறகு அவசரம் எதற்கு?... இன்னும் இளவரசர் மைக்கேலை கொன்றது யார் என்று வெளிப்பட வேண்டும்!!
நீதான்... நீ ஒரு மோசடிக்காரன்!!
மிஸ்டர் ஆண்டனி!! நீ தான் உண்மையான திருடன் கிங் விக்டர் என்று சொல்கிறேன்!!
லெமாய்ன் நான் நீயாக இருந்தால் மிகவும் கவனமாக பேசி இருப்பேன், கிங் விக்டர் ஏற்கனவே உன்னிடமிருந்து தப்பியவன், அதனால் அவனை எங்கு பார்க்கலாம் என்று காட்டுகிறேன்!! என் பின்னால் வா...
?


அனைவரும் கவனமாக இருங்கள். இவள்தான் இளவரசரை கொன்றவள்.... உஃப்....!!
போரிஸ்?? என்ன இது??
ஜாக்கிரதை!!
ஓஹ்!!
ஒரு பெண்!!!
அடக் கடவுளே இது பணிப்பெண் புரூனி??
இல்லை... உண்மையான புரூனி டினார்டில் இருந்து வரவில்லை இந்த நயவஞ்சகி வெர்ஜீனியா இங்கே வந்ததிலிருந்து அவள் முன் வருவதை தவிர்த்தாள் அவளுக்கு தெரியும் இவள் யார் என்று...?
தெரியுமா மிஸஸ் ரேவல்?? ஆனால் எப்படி?? இவள் உண்மையான பணிப்பெண் இல்லை என்றால் இவள் யார்??
ராணி வராகா... ஸ்லோவாக்கியாவில் கொல்லப்பட்டு சிதைக்கப்பட்ட உடல் இவள் உடல் அல்ல. செங்கர போராளிகளிடம் இருந்து தப்பியவள் பிறகு வைரத்தை தேடத் துவங்கினாள். பலவருடம் கழித்து வைரம் இங்கேதான் இருக்கிறது என்பதை அறிந்த இந்த முன்னாள் நடிகை, பணிப் பெண்ணாக வேடமிட்டு உள்ளே நுழைந்தாள், இளவரசர் மைக்கேல் இவளை அடையாளம் கண்டு கொண்டதும் அவரை சுட்டுக் கொன்றவள் அந்தத் துப்பாக்கியை ஐசக்டீன் பெட்டியில் மறைத்து வைத்தாள்.
வைரத்தை தேடும்போது இவள் இளவரசர் மைக்கேலை கொன்றதாக நீ சொல்கிறாய், ஒருவேளை அவள் கிங் விக்டரை சந்திக்க வந்து இருக்கலாம் அல்லவா??
நீ ஒரு சரியான பிடிவாதக்காரன் லெமாய்ன். ஆனால் உனக்கு ஒரு ஆச்சரியமான செய்தி ஒன்று வைத்திருக்கிறேன்.
பிரெஞ்சு பாதுகாப்பு அதிகாரி உண்மையான லெமாய்னை உனக்கு அறிமுகம் செய்கிறேன். டோவரில் உள்ள ஒரு வீட்டில் இருந்து இன்று காலை இவரை காப்பாற்றினேன். அந்த விலாசமிட்ட அட்டையை நீ தவறவிட்டுவிட்டாய்.
?


?!
தப்பி ஓட முயற்சிக்காதே லெமாய்ன்... அல்லது உன்னை கிங் விக்டர் என்று கூப்பிடலாமா??
!!!
ஆச்சரியம் வேண்டாம் லோமேக்ஸ் உண்மையில் ஹிராம்பிஷ் ஒரு அமெரிக்க ரகசிய உளவாளி எப்போதும் போலி அடையாளத்துடன் இருப்பார்!!!
நூலக அறையில் உள்ள புத்தகத்தில் வைரம் இருப்பதை கண்டு பிடித்ததாக கதை விட்டேன் உடனே லெமாயினும் மிஸ் புருனியிடம் அதைச் சொல்ல டிரெட்வெல்லை அனுப்பினான்.
ஆனால் வைரம் அங்கே இல்லை புரூனிதான் ஏஞ்சலா மேரி என்று வெளிப்படுத்த பின்னப்பட்ட வலை.
போரிஸ் மட்டும் வராது இருந்தால் நம் அனைவரையும் கொன்று இருப்பாள். ஆனால் இவ்வளவு நாள் கிங் விக்டரும் நம்முடன் இருந்தான் என்பதை என்னால் நம்ப முடியவில்லை.?
அப்புறம் இன்னொரு விஷயம் இளவரசர் நிக்கோலஸ் பற்றியது, அது நான்தான்!!
காங்கோவில் இருந்த காலத்தில் என் பெயர் அடையாளங்களை மாற்றி விட்டேன்.
முடிசூடும் புதிய அரசன் நான் என்பதால் எனக்கு ஒரு ராணியும் தேவை அதிர்ஷ்ட வசமாக விர்ஜினியா என்னை மணக்க இன்றுகாலை சம்மதம் சொல்லி விட்டாள்.
!
இருக்காது நிச்சயம் இருக்காது இது கொஞ்சமும் நியாயமே இல்லை!!



COMICS PDF TIMES




COMICS PDF TIMES

-முடிந்தது

அகதா கிறிஸ்டி

மர்ம மாளிகை

COMICS PDF TIMES






NOT FOR SALE
FAN MADE ONLY